முருகப்பெருமான் துணை

**மகான் யோகச்சித்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.08.2023**, புதன்கிழமை

1. தவமோடு தருமத்தை ஒன்றிணைத்து
தனிப்பெருங் கருணை வடிவாக
அவதாரம் எடுத்த ஞான குருவே
அரங்கமகா ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
ஆசிதனை சோபகிருது யாளிதிங்கள்
ஆறாம் திகதி கணக்கன் வாரம்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 06 ம் நாள், 23.08.2023, புதன்கிழமை)
3. வாரமதில் யோகச்சித்தரும்
வழங்குவேன் உலகநலமுற
சோரமின்றி ஞானவான்களை
செகமெங்கும் படைக்கும் வண்ணம்
4. வண்ணமுடன் அவதாரமெடுத்து
வடிவேலனாக வழிகாட்டி
எண்ணமெல்லாம் தூய்மைபெற
எல்லோருள்ளும் இறங்கி அருளும்
5. அருளும் அரங்கன் வழிமுறையை
அகில மகா சக்திகள் தேவர்கள்
வரம் தரும் மும்மூர்த்திகள் என
வரவேற்று வழிமொழிந்து ஆசிதர
6. ஆசிதர கலியுக மக்கள்
அடிபணிந்து வணங்கிட
ஆசியுடன் அரங்கன் தவபலமும்
ஆற்றலாகக் கிட்டி இனிதே

7. இனிதே இந்த உலகோர்
இறைபலம் தனையே அடைவர்
கனிவேலவன் தயவுபட
கருணையும் துணையும் கிட்டிட
8. கிட்டிட தனவான் ஞானவானாய்
குறைவிலா சீமானும் ஆகவே
இட்டம்போல் தேட்டு கழனி கிருஷி
இயற்கை வளம் பாதுகாப்பு கூடிட
9. கூடிட வாழும் காலமே
குபேரனாய் தருமனாகவும்
நாடியே குருபரனாகவும் தேற்றம்
ஞான வழி கண்டு சிறப்பர்
10. சிறப்பாக வழிகாட்டி அருளும்
சித்திமிகு அரங்கமகான்
அறப்போர் கலித் துன்பங்களை
அகற்றி அழிப்பதோடு பின்னில்
11. பின்னில் ஞான யுகமாற்றமும்
பெரும்பேற்றை தரும் வண்ணம்
மண்ணுலகோர்க்கு ஞான ஆட்சி மலரும்
மொழிந்திட்ட அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—